**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 336/2022**

**Prosecution witness : ம.சா.1** **Date : 19.09.2025.**

| | |
|---|---|
| **Name : பாரிஜாதம்** | **Caste : –** |
| **Father's Name : ஜெயக்குமார்** | **Calling : –** |
| **Village : சேலம் கேம்ப்** | **Religion : இந்து** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 65** |

**(Accused present. ) (Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) நான் வாடகைக்கு விட்டிருக்கும் ஈரோட்டில் உள்ள வீட்டின் சர்வே எண் மற்றும் அதன் விஸ்தீரனம் சொல்ல முடியுமா என்றால் என் கணவரை தான் கேட்க வேண்டும். என் கணவர் பூர்வீகம் மயிலம்பாடியா என்றால் மேட்டூராகும். நான் மயிலம்பாடியில் ஒருவரை திருமணம் செய்து அதன் வாயிலாக இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனரா என்றால் ஆமாம். ஆனால் அந்த நபரை நான் விவாகரத்து செய்து விட்டேன்.

2) எந்த நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்றேன் என்றால் பவானி நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்றேன். எந்த ஆண்டு எந்த நீதிமன்றம் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் விவாகரத்து பெற்ற போது என் இரண்டு குழந்தைகளின் வயது என்னவென்றால் பெரிய மகளுக்கு வயது 19 ஆகும். இரண்டாவது மகளுக்கு வயது 14 ஆகும். நான் தற்போது வரை மயிலம்பாடியில் உள்ள நபருடன் தான் வாழ்ந்து வருகிறேன் என்றும், தற்போது ஜெயகுமார் என்பவர் எனக்கு யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. ஜெயகுமார் என்பவர் என் கணவர் ஆவார்.

3) வாசவி கல்லூரி அருகே உள்ள சகோதரர் பெயர் என்னவென்றால் ஜெகதீசன்

ஆகும். அவர் எனக்கு மூத்தவர், அவர் வீட்டிற்கு அருகில் தான் எனக்கு சொந்தமாக வீடு உள்ளது என்றால் ஆமாம். அந்த வீடு எத்தனை வீடு யார் அந்த வீட்டில் குடியுள்ளார்கள் என்றால் ஒரு வீடு உள்ளது. அங்கு பாமா என்ற பெண் குடியுள்ளார். அந்த வீட்டு வாடகையை நான் வசூல் செய்வேனா என்றால் நானும் என் அண்ணனும் வசூல் செய்வோம்.

4) அந்த வீட்டு வாடகை வாங்கும் போது எதிரி அறிமுகம் ஆனார் என்றால் ஆமாம். எதிரி வேலை செய்து கொண்டிருக்கும் இடத்திற்கும் பவானியில் உள்ள வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் இரண்டு வீடுகள் தள்ளி உள்ளது. எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் ஊது வர்த்தி தயாரிக்கும் தொழில் செய்து வருகிறார்.

5) எதிரி எங்கு தொழில் செய்து வருகிறார் என்றால் ஆவின் பால் டிப்போவிற்கு சித்தோடு எதிரே உள்ள குடோனில் தொழில் செய்கிறார். அந்த தொழில் மூலமாக எதிரி நல்ல செல்வ செழிப்போடு வாழ்ந்து வந்தார் என்றால் ஆமாம். அவர் அங்கிருந்து என் அண்ணன் மூலமாக தான் மேட்டூர் வந்தார் என்றால் ஆமாம். மேட்டூர் வந்து என்னிடம் பணம் பெற்ற போது எந்தவிதமான காசோலையும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.

6) பணத்தை திருப்பி கேட்ட போது காசோலையை கொடுத்தார். மனு மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியின் முகவரி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எதிரியின் முகவரி தற்போது சொல்ல முடியுமா என்றால் நான்கு வீடு தள்ளி Fire Service காரர் வீட்டில் குடியிருப்பது தெரியும். தெளிவான முகவரி தெரியாது. எதிரியை எனக்கு யார் என்றே தெரியாது என்றும் நான் வேறு ஒரு நபரிடமிருந்து காசோலையை வாங்கி நான் எதிரியிடம் மோசடியாக பணம் பறிக்கும் நோக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) உண்மையாக எதிரி என்னிடம் பணம் வாங்கியிருந்தாலோ, எதிரிக்கு நான் பணம் கொடுத்திருந்தாலோ அவர் முகவரி சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரியின் தொலைபேசி எண் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் போது அதிலுள்ள சங்கதிகளை நான் தான் என் வழக்கறிஞரிடம்

சொன்னேன் என்றால் ஆமாம். அதில் எதிரியின் தொலைபேசி எண் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. நான் எந்தவிதமான வரவு செலவும் எதிரியிடம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியை தவிர என் சகோதரரர் வீட்டருகில் உள்ள நபர்களுக்கு வட்டிக்கு நான் பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. மேட்டூரில் வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை.

8) அசோகன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. அவர் மேட்டூரில் பைனான்ஸ் நடத்தி வரும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் சகோததர், அசோகன் நெருங்கிய நண்பர் என்றும் அதனால் அசோகனிடம் என் சகோதரர் மூலம் காசோலையை பெற்று நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்ன காணரத்திற்காக என்னிடம் பணம் வாங்கினார் என்றால் குடும்ப செலவிற்காகவும், வங்கியில் அவர் பெற்ற கடனுக்காகவும் என்னிடம் பணம் வாங்கினார்.

9) மனு, அறிவிப்பு, முதல் விசாரணையில் மேற்சொன்ன சங்கதிகளுக்காக பணம் வாங்கியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. யார் யார் முன்னிலையில் இந்த வழக்கு காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொடுத்தார் என்றால் அவருடன் யாரும் வரவில்லை. அவர் வரும்போதே காசோலையை நிரப்பி கொண்டு வந்தார் என்றால் ஆமாம். அவர் என் முன்னிலையில் கையொப்பமோ, தொகையோ எதுவும் பூர்த்தி செய்தாரா என்றால் கையொப்பம் என் முன்பாக செய்து கொடுத்தார்.

10) என்ன கலர் பேனாவால் கையொப்பம் செய்து எதிரி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. Ink pen, Ball point pen மூலமாக கையொப்பம் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. உண்மையாக என்னிடம் பணம் பெற்றிருந்தால் எனக்கு இந்த விவரம் தெரிந்திருக்கும் என்றும் அதனால் தான் எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

11) இதற்கு முன்னர் CMP No.1/2025 என்று நான் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த மனுவில் காசோலை காணாமல்

போனதாக நகலை குறியீடு செய்ய அனுமதி கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அசல் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த போதே காசோலை இல்லாமல் தாக்கல் செய்து பின்னிட்டு காசோலையை உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. (நீதிமன்றத்தில் காசோலை தாக்கல் செய்தது குறித்து 21.11.2022 என்ற தேதியில் சீல் இல்லை என சுட்டிக்காட்டப்பட்டது)

12) தற்போது முதல் விசாரணையின் போது காசோலை கொடுத்ததற்கான சீல் இல்லை என்றால் சீல் உள்ளது. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனக்கு மாதம் எந்த தொழில் செய்வதன் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

13) மேற்படி தொகை யார் மூலமாக எனக்கு கிடைத்தது என்றால் எனக்கு வாடகை வருமானம் மூலமாக வந்தது. 10, 20 வீடுகள் உள்ளது மற்றும் தோட்டம் 5 ஏக்கர் உள்ளது. அதன் சர்வே எண் சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன சொத்து மூலமாக எனக்கு வருமானம் எவ்வளவு வரும் என்றால் வீட்டு வாடகை மாதம் ரூ.60,000/- மும், வருட குத்தகை மூலமாக ரூ.1,00,000/- மும் வரும். என் மகள் வெளிநாட்டில் உள்ளதால் அவர் மூலமாக எனக்கு பணம் கேட்டால் கிடைக்கும்.

14) எதிரிக்கும் எனக்கும் உறவு முறை இல்லை என்றால் ஆமாம். என் மகளிடமோ, என் வருமானத்தையோ எதன் அடிப்படையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் பழக்கம் என்ற அடிப்படையில் கொடுத்தேன்.வட்டியில்லாமல் எதற்காக பணம் கொடுத்தேன் என்றால் மனிதாபிமான அடிப்படையில் கொடுத்தேன். மனிதாபிமான உள்ள நபர்கள் நிறைய பேர் உள்ளூரில் உள்ள நிலையில் நான் மனிதாபிமான அடிப்படையில் கொடுத்ததாக சொல்வது நம்பும் படி இல்லை என்றால் சரியல்ல. நான் முதலில் வருமானம் ஏதும் வரவில்லை என்று சொல்லிவிட்டு தற்போது லட்ச கணக்கில் வருமானம் வந்ததாக சொல்லியுள்ளது முன்னுக்குப்பின் முரணாக உள்ளது

என்றால் சரியல்ல.

15) வேறொரு நபருக்கு கொடுத்த காசோலையை என் அண்ணன் மூலமாக பெற்று பணம் பறிக்கும் முயற்சியில் என்னை ஈடுபடுத்தியுள்ளார்கள் என்றால் அவ்வாறு இல்லை. நான் சொல்வதை போல் எதிரியின் ஊரில் எனக்கு சொந்தமான எவ்வித வீடும் இல்லை என்றால் சரியல்ல. இருந்திருந்தால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் என் வசம் உள்ள சொத்து குறித்த ஆவணம் தாக்கல் செய்ய முடியமா என்றால் இது காசோலை வழக்காகும். இதற்கான ஆவணம் நான் தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது**

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 (I/C)**
**மேட்டூர்.**